# வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

## TNPSC
## நடப்பு நிகழ்வுகள்

(A book for TNSPSC Examination)

**ஜனவரி 2024**

VETRII I.A.S STUDY CIRCLE

SUCCESS GUARANTEED

Since 2011

An ISO 9001: 2015 Institution | Providing Excellence Since 2011


**Head Office**

Old No. 52, New No. 1, 9th Street,
F Block, 1st Avenue Main Road, (Near Istha Siddhi Vinayakar Temple), Anna Nagar East – 600 102.
Phone: 044-2626 5326 | 98844 21666 | 98844 32666

Branches

**SALEM**
No. 189/1, Meyanoor Road,
Near ARRS Multiplex, (Near Salem New Bus Stand),
Opp. Venkateshwara Complex,
Salem - 636 004.
**Ph: 0427-2330307 | 95001 22022**

**KOVAI**
No. 347, D.S. Complex
(3rd floor), Nehru Street,
Near Gandhipuram Central Bus Stand, Ramnagar,
Kovai - 641 009.
**Ph: 75021 65390**

**MADURAI**
No. 199, Dharshini Tower,
1st Floor, Vaigai Colony,
Anna Nagar,
Madurai - 625 020.
**Ph: 91500 21999**
**91500 21998**

**TIRUNELVELI**
No. 58, IVY Towers, 3rd Floor,
Palayamkottai,
Near Palai Bus Stand,
(Next to Muthamil Hospital),
Tirunelveli - 627 002.
**Ph: 91500 10079**

**THANJAVUR**
Muthu Complex,
(Pantaloons Showroom Basement)
No. 243, Cauvery Nagar,
Opp. New Housing Unit,
Thanjavur - 613 005.
**Ph: 78711 69099 | 78715 71819**

**KOVILPATTI**
No. 15, Kathiresan Kovil Road,
Behind Kaliamman Temple,
Kovilpatti – 628 501.
**Ph: 90037 90335**
**81222 80685**

**THIRUCHENGODE**
Vivekananda Educational Institutions
Elayampalayam (Po),
Thiruchengode (Tk),
Namakkal (Dt) - 637205.
**Ph: 7845779908**

www. vetriias. com

# முகவுரை



**மு.சண்முகம்**

நிறுவனர்

வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம்

## இயக்குநர் வாழ்த்து மடல்

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்.**

பொருள்:

ஒன்றை பற்றி நினைத்தவர் நினைத்த படியே செயல்புரிவதில் உறுதியடைந்தவராக இருந்தால் நினைத்தவாறு வெற்றியே பெறலாம்.

**என் அன்பிற்கினிய மாணவர்களுக்கு**

மேற்கண்ட வள்ளுவரின் வாய்மொழியினை மெய்பிக்க விடா முயற்சியுடன், கடினமாக உழைத்து நேர்மையான வழியில் மாணவர்கள் தங்கள் வெற்றியினை அடைய **வெற்றி ஆட்சிப்பணிகள் பயிற்சி நிறுவனம்** சரியான வழிகாட்டுதலுடன், தரமான பயிற்சியினை அளித்து ஒவ்வொரு மாணவரின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்தி, அவர்களின் குறிக்கோள்களை நிறைவு செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

நம் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு அனைத்து பாடத்திலும் அடிப்படை அறிவை தெளிவுப்படுத்தும் வகையில் நடத்தப்படும் அதனை விளக்கும் வகையில் நம்முடைய அனைத்து கையேடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலினை படித்து பயன்பெற மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துகளை உங்களுக்கு உரித்தாக்கி கொள்கிறேன்.

மு.சண்முகம்
இயக்குனர்
வெற்றி ஐ.ஏ.எஸ் பயிற்சி நிறுவனம்

வெளியீட்டாளர்

வெற்றி சண்முகம் பப்ளிகேஷன்

எஃப்–பிளாக், புதிய எண். 1, 3–வது மாடி, 9–வது தெரு, 1–வது அவன்யூ பிராதான சாலை,

சிந்தாமணி, அண்ணாநகர் (கிழக்கு), சென்னை–600 102.

தொலைபேசி: 044–26265326

© All rights reserved with the publisher. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the written permission of the publisher, will be responsible for the loss and may be punished for compensation under copyright act.

# பொருளடக்கம்





வரலாறு 01




09 அரசியல் அறிவியல்



புவியியல் 14




15 பொருளாதாரம்



அறிவியல் 17

தினசரி
தேசிய நிகழ்வு 19






21 சர்வதேச நிகழ்வு

தமிழ்நாடு 22



# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜனவரி 1** | **DRDO நிறுவன தினம்** | ▪ சமீபத்தில், DRDO தனது 66வது நிறுவன தினத்தை ஜனவரி 1, 2024 அன்று கொண்டாடியது.<br>▪ இது பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவாகும்.<br>▪ இது 1958 இல் உருவாக்கப்பட்டது. |
| **ஜனவரி 4** | **உலக பிரெய்லி தினம்** | ▪ பார்வையற்றவர்கள் பிரெய்லியை அணுகுவதற்கான உரிமையை அங்கீகரிப்பதற்காக ஆண்டுதோறும் **ஜனவரி 4 அன்று உலக பிரெய்லி தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ பிரெய்லியைக் கண்டுபிடித்த **லூயிஸ் பிரெய்லியின்** பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ பிரெய்லி என்பது பார்வையற்றவர்களால் பயன்படுத்தப்படும் ஒரு தொட்டுணரக்கூடிய எழுத்து முறையாகும். |
| **ஜனவரி 3** | **BIS இன் 77வது நிறுவன தினம்** | ▪ இந்திய தர நிர்ணய நிறுவனம் (BIS) என்பது இந்தியாவின் முதன்மையான தேசிய தரநிலை அமைப்பாகும்<br>▪ இது **நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ்** செயல்படும் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும். |
| **ஜனவரி 9** | **பிரவாசி பாரதிய திவாஸ்** | ▪ பிரவாசி பாரதிய திவாஸ் என்று அழைக்கப்படும் வெளிநாடு வாழ் இந்தியர் (NRI) தினம், இந்தியாவின் வளர்ச்சிக்கு வெளிநாடுவாழ் இந்திய சமூகத்தின் பங்களிப்பு மற்றும் சாதனைகளைக் குறிக்கும் வகையில் **ஜனவரி 9** அன்று கொண்டாடப்படுகிறது.<br>▪ மகாத்மா காந்தி 1915 இல் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியதை, மிகப் நினைவுகூறும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.<br>▪ இந்த நாள் முதன்முதலில் 2003 இல் கொண்டாடப் பட்டது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜனவரி 10 முதல் 18** | **புத்தொழில் இந்தியா புதுமைக் கண்டுபிடிப்பு வாரம்** | ▪ நாட்டின் புத்தொழில் நிறுவனங்கள், தொழில் முனைவோர், முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்போர் மற்றும் சம்பந்தப்பட்ட பிற தரப்பினரை ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன், வர்த்தக மற்றும் **தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (டிபிஐஐடி) 2024 ஜனவரி 10 முதல் 18 வரை புத்தொழில் இந்தியா புதுமைக் கண்டுபிடிப்பு வாரம்** 2024 என்ற ஒரு வார தொடர் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது.<br>▪ இந்திய புத்தொழில் சூழல் மற்றும் தேசிய **புத்தொழில் தினம் 2024, ஜனவரி 16 அன்று** கொண்டாடப்படுகிறது. |
| **ஜனவரி 12** | **தேசிய இளைஞர் தினம்** | ▪ ஜனவரி 12, 1863 அன்று கொல்கத்தாவில் பிறந்த சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12 அன்று இந்தியாவில் **தேசிய இளைஞர் தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ விவேகானந்தர் 1893 இல் சிகாகோவில் உலக மதங்களின் பாராளுமன்றத்தில் தனது புகழ்பெற்ற உரையை ஆற்றினார்.<br>▪ கருத்துரு 2024 : "MYBharat – Viksit Bharat@2047– By the Youth, For the Youth" |
| **ஜனவரி 15** | **76வது ராணுவ தினம்** | ▪ நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த ராணுவ வீரர்கள் மற்றும் அனைத்து வீரர்களையும் நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் **ஜனவரி 15ம் தேதி இந்தியாவில் ராணுவ தினமாக** கொண்டாடப்படுகிறது.<br>▪ 1949 ஆம் ஆண்டு இதே நாளில்தான் பீல்டு மார்ஷல் **கோதண்டேரா எம் கரியப்பா** சுதந்திர இந்தியாவின் முதல் இந்தியத் தளபதியாக பதவியேற்றார். |
| **ஜனவரி 23** | **சுபாஷ் சந்திரபோஸின் 127வது பிறந்தநாள்** | ▪ நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 127வது பிறந்தநாள் ஜனவரி 23ம் தேதி கொண்டாடப்பட்டது.<br>▪ இது **தேசிய வலிமை தினமாக** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ அச்சமின்மை மற்றும் தேசபக்தியை, குறிப்பாக இளைஞர்களிடையே, சவால்களை எதிர்கொண்டு வலுவாக நிற்க அவர்களை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஜனவரி 24 | தேசிய பெண் குழந்தைகள் தினம் | ▪ பெண் குழந்தையை மதிக்கும் நேர்மறையான சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்படுகிறது.<br>▪ இந்த தினம் முதன்முதலில் 2008 இல் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் அனுசரிக்கப்பட்டது. |
| ஜனவரி 24 | சர்வதேச கல்வி தினம் | ▪ சர்வதேச கல்வி தினம் ஒவ்வொரு ஆண்டுதோறும் ஜனவரி 24 அன்று அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2023 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் 'Learning for Lasting Peace' என்பதாகும்.<br>▪ ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் 2019 ஜனவரி 24 அன்று முதன்முதலில் இந்த தினம் அனுசரிக்கப்பட்டது. |
| ஜனவரி 24 | உத்தரபிரதேச மாநில தினம் | ▪ உத்தரபிரதேச மாநில தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 அன்று கொண்டாடப் படுகிறது.<br>▪ ஐக்கிய மாகாணம் ஜனவரி 24, 1950 அன்று உத்தரப் பிரதேசம் எனப் பெயர் மாற்றப்பட்டது.<br>▪ உத்தரபிரதேச அரசு ஜனவரி 24ஐ உத்தரபிரதேச நிறுவன தினமாக மே 2017 இல் அறிவித்தது. |
| ஜனவரி 25 | 13வது தேசிய வாக்காளர் தினம் | ▪ புதிய வாக்காளர்கள் சேர்க்கையை ஊக்குவிக்கவும், எளிதாக்கவும் மற்றும் அதிகரிக்கவும் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25 அன்று தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்படுகிறது.<br>▪ 2011 ஆம் ஆண்டு முதல் இந்திய தேர்தல் ஆணையத்தால் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ ஜனவரி 25, 1950 இந்திய தேர்தல் ஆணையம்(ECI) தொடங்கப்பட்டதை நினைவு கூறும் வகையில் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருத்துரு – 'Nothing Like Voting, I Vote For sure' என்பதாகும். |
| ஜனவரி 25 | தேசிய சுற்றுலா தினம் | ▪ இந்தியாவில் தேசிய சுற்றுலா தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25 அன்று கொண்டாடப்படுகிறது.<br>▪ நாட்டின் பொருளாதாரத்திற்கு சுற்றுலாவினால் ஏற்படும் நன்மைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருத்துரு – "Sustainable Journeys, Timeless Memories" என்பதாகும்.<br>▪ இந்தியாவில் தேசிய சுற்றுலா தினம் முதன்முதலில் 1948 இல் கொண்டாடப்பட்டது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **ஜனவரி 25** | **54 வது இமாச்சல பிரதேச மாநில தினம்** | ▪ ஒவ்வொரு ஆண்டும் **ஜனவரி 25** இமாச்சல பிரதேச மாநில தினமாக கொண்டாடப்படுகிறது.<br>▪ இமாச்சலப் பிரதேசம் 1971 **ஆம் ஆண்டு ஜனவரி 25** ஆம் தேதி **இந்தியாவின்** 18 வது மாநிலமாக உருவானது.<br>▪ **இந்திரா** காந்தி அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்தார். |
| **ஜனவரி 26** | **சர்வதேச சுங்க தினம்** | ▪ எல்லைகளைத் தாண்டி சரக்குகளை சுமூகமாக நகர்த்துவதில் சுங்க அதிகாரிகள் ஆற்றிய பங்கை கௌரவித்தல் மற்றும் அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் **ஜனவரி 26 அன்று சர்வதேச சுங்க தினம்** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ 2023ம் ஆண்டிற்கான : Customs Engaging Traditional and New Partners with Purpose என்பதாகும் |
| | **உலக தொழுநோய் தினம்** | ▪ உலக தொழுநோய் தினம் ஒவ்வொரு ஆண்டும் **ஜனவரி மாதத்தின் கடைசி ஞாயிறு அன்று** அனுசரிக்கப்படுகிறது.<br>▪ **இந்நாளின்** நோக்கம் தொழுநோயினால் ஏற்படும் களங்கத்திற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.<br>▪ தொழுநோய் **ஹேன்சன் நோய்** என்றும் அழைக்கப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான : "Beat Leprosy" என்பதாகும்.<br>▪ **மைக்கோபாக்டீரியம் லெப்ரே** என்ற பாக்டீரியாவால் தொழுநோய் ஏற்படுகிறது. |
| **ஜனவரி 30** | **உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினம் (WNTDD)** | ▪ உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினம் (WNTDD) ஒவ்வொரு ஆண்டும் **ஜனவரி 30** அன்று உலகெங்கிலும் உள்ள ஏழ்மையான மக்கள் மீது NTD களின் பேரழிவு தாக்கம் பற்றிய சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கொண்டாடப்படுகிறது.<br>▪ 2024ம் ஆண்டிற்கான கருத்துரு: Unite, Act, Elimi-nate என்பதாகும். |
| **ஜனவரி 30** | **தியாகிகள் தினம்** | ▪ இந்தியா ஒவ்வொரு ஆண்டும் மகாத்மா காந்தியின் நினைவு தினமான **ஜனவரி 30** அன்று **தியாகிகள் தினம்** அல்லது **ஷாஹீத் திவாஸ் தினமாக கொண்டாடுகிறது.**<br>▪ மகாத்மா காந்தி 1948 **இல் நாதுராம் விநாயக் கோட்சேவால்** படுகொலை செய்யப்பட்டார். |

# 1.2 பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

## C–130J சூப்பர் ஹெர்குலஸ் விமானம்

- இந்திய விமானப்படையானது கார்கில் விமான ஓடுபாதையில் C130–J போக்குவரத்து விமானத்தை இரவு நேரத்தில் வெற்றிகரமாக தரையிறக்கியது.
- லடாக் பகுதியில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகில் அமைந்துள்ள விமான ஓடுதளத்தில் **இரவு தரையிறக்கம் மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் முறையாகும்.**
- இது அமெரிக்க விமான தயாரிப்பு நிறுவனமான **லாக்ஹீட் மார்ட்டின்** மூலம் தயாரிக்கப்பட்டது.

## சஹ்யோக் கைஜின்

- இந்திய கடலோர காவல்படையுடன், **'சஹ்யோக் கைஜின்'** என்ற கூட்டுப் பயிற்சியில் பங்கேற்க **ஜப்பான் கடலோர காவல்படையின் (JCG)** யாஷிமா கப்பல் சென்னை துறைமுகத்தை வந்தடைந்தது.
- இந்த பயிற்சியானது, இரு கடலோரக் காவல் படைகளுக்கு இடையேயான தொடர்பை மேம்படுத்துவதற்காக, 2006ல் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே கைையெழுத்திடப்பட்ட ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் (MoC) ஒரு பகுதியாகும்.

## இந்தியா இங்கிலாந்து இடையே 2 ஒப்பந்தங்கள் கையொப்பம்

- சமீபத்தில் இருதரப்பு சர்வதேச மாணவர் பரிமாற்றத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கான ஒப்பந்தக் கடிதம் (LoA) ஆகியவற்றில் இந்தியாவும் இங்கிலாந்தும் கையெழுத்திட்டன.
- இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு(DRDO) மற்றும் இங்கிலாந்தின் பாதுகாப்பு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகம் (DSTL) ஆகியவற்றுக்கு இடையே R&D மீதான ஒப்பந்தம் கையெழுத்தானது.

## த்ரிஷ்டி 10 ஸ்டார்லைனர்

- **இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆளில்லா வான்வழி வாகனமான** (UAV) **இந்திய கடற்படையின் த்ரிஷ்டி 10 ஸ்டார்லைனர்** திறந்து வைக்கப்பட்டது.
- இது ஒரு மேம்பட்ட உளவுத்துறை, கண்காணிப்பு மற்றும் உளவுத்தளமாகும் (ISR).O

## ஆகாஷ் ஏவுகணை

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஒடிசாவில் உள்ள சந்திப்பூரில் புதிய தலைமுறை **ஆகாஷ் (ஆகாஷ்–என்ஜி)** ஏவுகணையின் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
- இது தரையில் இருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணையாகும் (SAM).

## MILAN 24 கடற்பயிற்சி

- இந்திய கடற்படையின் பன்னாட்டு கடற்படை பயிற்சியான MILAN 24 பிப்ரவரி 19 முதல் 27 வரை விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ளது.
- MILAN என்பது **இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை** மேற்கொள்ளப்படும் பன்னாட்டு கடற்படைப் பயிற்சியாகும், இது 1995 இல் இந்தியாவின் **'கிழக்கு நோக்கிய பார்வை'** கொள்கையின்படி நான்கு வெளிநாடுகளின் (இந்தோனேசியா, சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து) பங்கேற்புடன் தொடங்கப்பட்டது.

## அயுத்யா கடற்படை பயிற்சி

- இந்தியாவும் தாய்லாந்தும் தங்களின் முதல் இருதரப்பு கடற்படை பயிற்சியை சமீபத்தில் நடத்தியது, இதற்கு **'எக்ஸ்–அயுத்யா'** என்று பெயரிடப்பட்டது.
- அயுத்யா என்ற பெயர் இரண்டு பழங்கால நகரங்களைக் குறிக்கிறது – இந்தியாவில் அயோத்தி (உத்திரப் பிரதேசம்) மற்றும் தாய்லாந்தில் அயுத்யா.

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011

### விஜய் ராகவன் குழு அறிக்கை

- விஜய் ராகவன் தலைமையிலான ஒன்பது பேர் கொண்ட குழுவானது, சமீபத்தில் **பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் செயல்பாடு குறித்த குறைகளை நிவர்த்தி செய்யும் விரிவான அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.**

### முக்கிய பரிந்துரைகள்

- பாதுகாப்பு அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரை துணைத்தலைவர்களாகக் கொண்டு **பிரதமரின் தலைமையில் பாதுகாப்பு தொழில்நுட்ப கவுன்சில் (டிடிசி)** உருவாக்க வேண்டும்.
- DRDO அமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்.
- DRDO அமைப்பின் 40 ஆய்வகங்களுக்குப் பதிலாக **10 தேசிய அளவிலான ஆய்வக மையங்களை** அமைக்க வேண்டும்

# 1.3 உலக அமைப்புகள் உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

### பிரிக்ஸ் கூட்டமைப்பில் புதிய உறுப்பு நாடுகள்

- **எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய ஐந்து** புதிய நாடுகள் முறையாக பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைந்தன.
- இது உலகின் முக்கிய வளர்ந்து வரும் பொருளாதாரங்களை உள்ளடக்கிய பலதரப்பு குழுவாகும்.
- பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனாவை உள்ளடக்கிய குழு 2006 இல் உருவாக்கப்பட்டது.
- தென்னாப்பிரிக்கா 2010 இல் சேர்க்கப்பட்டது.

# 1.4 முக்கிய இடங்கள் பற்றிய செய்திகள்

### யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியல்

- 2024–25 ஆம் ஆண்டிற்கான யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் சேர்ப்பதற்காக **"மராத்தா இராணுவ நிலப்பரப்புகளை"** இந்தியா பரிந்துரைத்துள்ளது.
- இது 12 கோட்டைகளை உள்ளடக்கிய மராட்டிய ஆட்சியின் உத்திசார்ந்த இராணுவ சக்திகளை வெளிப்படுத்தும் கோட்டைகளின் வலையமைப்பாகும்.
- 12 கோட்டைகளில் மகாராஷ்டிராவில் உள்ள சல்ஹேர், ஷிவ்னேரி, லோகாட், கந்தேரி, ராய்காட், ராஜ்காட், ரதப்காட், சுவர்ணதுர்க், பன்ஹாலா, விஜயதுர்க் மற்றும் சிந்துதுர்க் ஆகிய கோட்டைகளும், தமிழ்நாட்டில் உள்ள செஞ்சியும் அடங்கும்.

# 1.5 விளையாட்டு

### கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் 2023

- சென்னை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- **கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் தென்னிந்தியாவில் நடைபெறுவது இதுவே முதல்** முறையாகும்.
- சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோவை ஆகிய நான்கு நகரங்களில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.

வெற்றி I.A.S. கல்வி மையம் Since 2011

- கேலோ இந்தியா வரலாற்றில் முதல் முறையாக தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

### ஆஸ்திரேலியா ஓபன் 2024

- ஆஸ்திரேலிய ஓபன் என்பது ஆஸ்திரேலியாவின் விக்டோரியாவில் உள்ள மெல்போர்ன் பூங்காவில் ஆண்டுதோறும் நடைபெறும் டென்னிஸ் போட்டியாகும்.
- **ஆஸ்திரேலிய ஓபன் 2024ன் வெற்றியாளர்கள்**
    - ஆண்கள் ஒற்றையர் – ஜன்னிக் சின்னர்
    - பெண்கள் ஒற்றையர் – அரினா சபலெங்கா
    - ஆண்கள் இரட்டையர் – ரோகன் போபண்ணா மற்றும் மேத்யூ எப்டன்
    - பெண்கள் இரட்டையர் – ஹ்சீஹ் சு–வெய் மற்றும் எலிஸ் மெர்டென்ஸ்
    - கலப்பு இரட்டையர் – ஹ்சீஹ் சு–வெய் மற்றும் ஜான் ஜீலின்ஸ்கி

## 1.6 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### எம் எஸ் சுவாமிநாதன் விருது 2024

- ஹரியானா வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் **பி.ஆர். காம்போஜ்** அவர்களுக்கு 2024ம் ஆண்டிற்கான மதிப்புமிக்க எம்.எஸ். சுவாமிநாதன் விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் வேளாண் துறையில் உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்திய புகழ்பெற்ற நபர்களின் வாழ்நாள் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக 2004 இல் இந்த விருது நிறுவப்பட்டது.

### தேசிய விளையாட்டு விருதுகள் 2023

- ராஷ்டிரபதி பவனில் ஜனாதிபதி திரௌபதி முர்முவால் தேசிய விளையாட்டு விருதுகள் 2023 வழங்கப்பட்டது.
- **2023க்கான மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருது:**
    - சிராக் ஷெட்டி மற்றும் சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி (பேட்மிண்டன்).
- **அர்ஜுனா விருது – 26 விளையாட்டு வீரர்கள்**
    - தமிழகத்தைச் சேர்ந்த வைஷாலி (சதுரங்கம்)
- **சிறந்த பயிற்சியாளர்களுக்கான துரோணாச்சார்யா விருது (வழக்கமான பிரிவு):**
    - லலித் குமார் (மல்யுத்தம்)
    - ஆர்.பி.ரமேஷ் (சதுரங்கம்)
    - மஹாவீர் பிரசாத் சைனி (பாரா தடகளம்)
    - சிவேந்திர சிங் (ஹாக்கி)
    - கணேஷ் பிரபாகர் தேவ்ருக்கர் (மல்லகம்ப்).
- **சிறந்த பயிற்சியாளர்களுக்கான துரோணாச்சார்யா விருது (வாழ்நாள் பிரிவு):**
    - ஜஸ்கிரத் சிங் கிரேவால் (கோல்ப்)
    - பாஸ்கரன் இ (கபடி)
    - ஜெயந்த குமார் புஷிலால் (டேபிள் டென்னிஸ்)
- **வாழ்நாள் சாதனைக்கான தயான் சந்த் விருது:**
    - மஞ்சுஷா கன்வர் (பேட்மிண்டன்)
    - வினீத் குமார் சர்மா (ஹாக்கி)
    - கவிதா செல்வராஜ் (கபடி).
- **மௌலானா அபுல் கலாம் ஆசாத்** (MAKA) டிராபி 2023:
    - குருநானக் தேவ் பல்கலைக்கழகம், அமிர்தசரஸ்

### ஸ்வச் சர்வேக்ஷன் விருதுகள் 2023

- இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு சமீபத்தில் புது தில்லியில் ஸ்வச் சர்வேக்ஷன் விருதுகள் 2023 ஐ வழங்கினார், இது **வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தால்** (Mo–HUA) நடத்தப்பட்டது.
- ஒட்டுமொத்தப் பிரிவில் **சூரத்** மற்றும் **இந்தூர்** முதல் இடத்தைப் பிடித்தன
- வாரணாசி தூய்மையான கங்கை நகரமாக தேர்வு செய்யப்பட்டது.
- சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலமாக **மகாராஷ்டிரா** தேர்வு செய்யப்பட்டது
- நாட்டிலுள்ள 446 நகரங்களில் **சென்னை 199வது** இடத்தைப் பிடித்துள்ளது.
- மேலும் சென்னை ODF++ ஆகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

## பாரத ரத்னா விருது

- மறைந்த சோசலிஸ்ட் தலைவர் **கர்பூரி தாக்கூருக்கு** (மரணத்திற்குப் பின்) பாரத ரத்னா விருது வழங்கப்படும் என்று ஜனாதிபதி திரௌபதி முர்மு அறிவித்துள்ளார்.
- **இவர் பீகார் மாநிலத்தின் முதல்வராக இரண்டு முறை பதவி வகித்தவர்** ஆவார்.

## பத்மவிருது பெற்ற தமிழர்கள்

- 2024 ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளுக்கு தமிழகத்தைச் சேர்ந்த 8 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- **பத்ம விபூஷன்** (இரண்டாவது உயரிய சிவிலியன் விருது)
  - வைஜெயந்திமாலா பாலி
  - பத்மா சுப்ரமணியம்
- **பத்ம பூஷன்**
  - விஜயகாந்த்
- **பத்மஸ்ரீ**
  - எம். பத்ரப்பன்
  - ஜோஷ்னா சின்னப்பா (விளையாட்டு)
  - ஜோ டி குரூஸ் (இலக்கியம் மற்றும் கல்வி)
  - ஜி. நாச்சியார் (மருத்துவம்)
  - நாதஸ்வர கலைஞர் சேஷம்பட்டி டி.சிவலிங்கம் (கலை)

## தமிழ்நாடு மாநில விருதுகள்

- 2024ம் ஆண்டிற்கான **கோட்டை அமீர் மத நல்லிணக்க விருது,** ஆல்ட்நியூஸ் இணையதளத்தின் இணை நிறுவனர் **முகமது ஜுபைருக்கு** முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்.
- மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த 1.52 ஏக்கர் நிலத்தை வழங்கிய மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த **பூரணம் என்ற ஆயி அம்மாளுக்கு முதலமைச்சரின் சிறப்பு விருது** வழங்கப்பட்டது.
- **அண்ணா பதக்கம் 2024** – யாசர் அராபத், டி. டேனியல் செல்வசிங் மற்றும் எஸ். சிவக்குமார்.
- **சி.நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது – எஸ்.பாலமுருகன்**
- **சிறந்த காவல் நிலையம்** – C3 S.S. காலனி காவல் நிலையம், மதுரை.

# 1.7 நியமனங்கள்

## 16வது நிதி ஆணையத்தின் தலைவர்

- நிதி ஆயோக்கின் முன்னாள் துணைத்தலைவர் **அரவிந்த் பனகாரியாவை** 16வது நிதி ஆணையத்தின் தலைவராக மத்திய அரசு நியமித்துள்ளது.
- **ஐந்தாண்டு காலத்திற்கு** மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான வரி வருவாய் பகிர்வை இந்தக்குழு பரிந்துரைக்கும்.
- அரவிந்த் பனகாரியா 2015 முதல் 2017 வரை திட்டக்குழுவிற்குப் பதிலாக தொடங்கப்பட்ட **நிதி ஆயோக்கின் முதல் துணைத் தலைவராக** செயல்பட்டவர் ஆவார்.

## ரோஹித் குமார் சிங் கமிட்டி

- **மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம்** (CCPA) **ரோஹித் குமார் சிங் கமிட்டியின்** முதல் கூட்டத்தை நடத்தியது.
- ஜனவரி 8, 2024 அன்று பயிற்சி நிறுவனங்கள் தவறான விளம்பரங்கள் வெளியிடுவது தொடர்பான வழிகாட்டுதல்களைத் தயாரிக்க இந்தக் குழு அமைக்கப்பட்டது.
- இந்த வழிகாட்டுதலானது இணையவழியாகவோ அல்லது நேரடியாகவோ பயிற்சி வழங்கும் அனைத்து பயிற்சி நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

## ராணுவத்தின் முதல் பெண் சுபேதார்

- ஹவில்தார் **ப்ரீத்தி ரஜக்** இந்திய ராணுவத்தின் முதல் பெண் சுபேதாராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- 19வது ஆசிய விளையாட்டுப் போட்டி 2022ல் துப்பாக்கி சுடுவதில் ரஜக் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

### இந்தியா மற்றும் பாகிஸ்தான்

- **"அணுசக்தி நிலையங்கள் மற்றும் வசதிகளுக்கு எதிரான தாக்குதலைத் தடுக்கும் இருதரப்பு ஒப்பந்தத்தின்"** கீழ் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் அணுசக்தி நிலையங்களின் பட்டியலை பரிமாறிக் கொண்டன.
- இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் அணுமின் நிலையங்களைத் தாக்குவதை இந்த ஒப்பந்தம் தடை செய்கிறது.
- இது 1992 இல் கையெழுத்தானது.

### தடையில்லாமல் செல்வதற்கான ஒப்பந்தம் (FMR)

- மியான்மருடன் சர்வதேச எல்லையில் உள்ள தடையில்லாமல் செல்வதற்கான ஒப்பந்தத்தை (FMR) முடிவுக்கு கொண்டுவர இந்தியா முடிவு செய்துள்ளது.
- FMR ஆனது **இந்தியா–மியான்மர்** எல்லையின் இருபுறமும் வசிக்கும் மக்கள் விசா இல்லாமல் ஒருவருக்கொருவர் 16 கிமீ தூரம் செல்ல அனுமதிக்கிறது.

### இந்தியா – நேபாளம்

- இந்தியா – நேபாளம் கூட்டு ஆணையத்தின் 7வது கூட்டம் சமீபத்தில் காத்மாண்டுவில் நடைபெற்றது.
- அடுத்த 10 ஆண்டுகளில் **இந்தியாவுக்கு 10,000 மெகாவாட் மின்சாரம்** ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கும் ஒப்பந்தத்தில் நேபாளமும் இந்தியாவும் கையெழுத்திட்டுள்ளன.
- நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட் மற்றும் நேபாள அகாடமி ஆஃப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி ஆகியவை இணைந்து நேபாளத்தின் முனல் செயற்கைக்கோளை ஏவ உதவும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

### இந்தியா – சவுதி அரேபியா

- **இந்தியாவும் சவுதி அரேபியாவும்** இருதரப்பு ஹஜ் ஒப்பந்தம் 2024ல் கையெழுத்திட்டன.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ், 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்திர ஹஜ் யாத்திரைக்காக இந்தியாவுக்கு 1,75,025 யாத்ரீகர்களுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.
- இந்திய ஹஜ் கமிட்டி மூலம் யாத்ரீகர்கள் பயணம் மேற்கொள்ள 1,40,020 இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

### இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம்

- குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் **ஐக்கிய அரபு அமீரக அதிபர் முகமது பின் சயீத் அல் நஹ்யான்** பங்கேற்ற இருதரப்பு சந்திப்பு நடைபெற்றது.
- இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையே **நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.**
    - புதுப்பிக்கதத்தக்க எரிசக்தி, மருத்துவத் துறையில் புத்தாக்க திட்டங்கள் மற்றும் உணவு பூங்கா மேம்பாடு ஆகியவற்றில் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.
    - **குஜராத் மாநில அரசு மற்றும் துபாயில்** உள்ள நிறுவனத்திற்கு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

VETRII IAS STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

### இந்தியா–பிரான்ஸ்

- பிரான்ஸ் அதிபர் **இம்மானுவேல் மேக்ரான்** ஜனவரி 25–ம் தேதி ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு வர உள்ளார்.
- ஜனவரி 26 அன்று நடைபெறும் 75வது குடியரசு தின விழாவிற்கு தலைமை விருந்தினராக இம்மானுவேல் மேக்ரான் அழைக்கப்பட்டுள்ளார்.
- இந்த வருகையின் போது, "Horizon 2047 சாலை வரைபடம்" மூலம் முடிவு செய்யப்பட்ட பிரான்ஸ்–இந்தியா மூலோபாய கூட்டுறவை புதுப்பிப்பதை அவர் உறுதிப்படுத்த உள்ளார்.
- **இந்தியாவும் பிரான்சும் கூட்டுக் கண்காணிப்பு** திட்டங்களை மேற்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளன.
- இந்த இரு நாடுகளிடையே பாதுகாப்புத்துறை உற்பத்தியில் ஒத்துழைப்பை மேம்படுத்த பாதுகாப்பு தொழில்துறை சாலை வரைபடம் அறிவிக்கப்பட்டது.
- இரு நாடுகளிடையே அந்தந்த பாதுகாப்பு தொழில் துறைகளின் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படும்.

## 2.2 சமீபத்திய நீதிமன்றத் தீர்ப்புகள்

### பில்கிஸ் பானு வழக்கு

- 2002 ஆம் ஆண்டு பில்கிஸ் பானு கூட்டு பலாத்கார வழக்கில் தண்டனை பெற்ற 11 பேருக்கு வழங்கப்பட்ட விடுதலையை உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

குறிப்பு

- **அரசியலமைப்பின் பிரிவுகள் 72 மற்றும் 161 இன் கீழ்**, குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர்கள் குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்கலாம், மேலும் நீதிமன்றங்கள் வழங்கிய தண்டனையை இடைநிறுத்தலாம், தள்ளுபடி செய்யலாம் அல்லது மாற்றலாம்.
- **குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின்** (CrPC) **பிரிவு 432ன் கீழ்** தண்டனைகளை குறைக்க மாநில அரசுகளுக்கும் அதிகாரம் உள்ளது.

## 2.3 பொது விழிப்புணர்வு மற்றும் பொதுக் கருத்து

### மத்திய சிவில் சேவைகள் (ஓய்வூதியம்) விதிகள் 2021 திருத்தம்

- 2021 ஆம் ஆண்டின் **மத்திய சிவில் சேவைகள் (ஓய்வூதியம்) விதிகளை** மத்திய அரசு திருத்தியுள்ளது, இது பெண் அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் தங்கள் வாழ்க்கைத்துணைக்குப் பதிலாக தங்கள் குழந்தைகளை குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்காக பரிந்துரைக்க அனுமதிக்கிறது.
- இதுவரை உள்ள விதிகளின்படி, குடும்ப ஓய்வூதியம் முதலில் உயிருடன் இருக்கும் வாழ்க்கைத் துணைக்கு சென்று சேரும். வாழ்க்கைத் துணை இறந்த பிறகுதான் அவர்களின் பிள்ளைகள் அதைப் பெற தகுதி பெறுவார்கள்.

### பட்டியல் வகுப்பினருக்கான துணைப்பிரிவுகள்

- 1200 பட்டியல் வகுப்பினரில் மிகவும் பின்தங்கிய சமூகங்களுக்கு சலுகைகள், திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளை சமமாகப் பகிர்ந்தளிப்பதற்கான ஒரு முறையை மதிப்பீடு செய்து செயல்பட **ஐந்து பேர் கொண்ட செயலாளர்கள் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.**
- இக்குழுவின் தலைவராக **அமைச்சரவை செயலர்** இருப்பார்.
- முன்னதாக, மதிகா சமூகம் உட்பட தலித் (பட்டியலிடப்பட்ட சாதிகள்) சமூகங்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக ஒரு குழுவை உருவாக்குவதாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்

### முக்கியமான தொழில்நுட்பத் துறைகளுக்கான சாலை வரைபடங்கள்

- முக்கியமான தொழில்நுட்பத் துறைகளுக்கான உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை நடத்துவதற்கான வரைவு சாலை வரைபடத்தை **மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்** வெளியிட்டுள்ளது.
- இந்த சாலை வரைபடங்களை **மேம்பட்ட கணினி மேம்பாட்டு மையம்** (CDAC) தயாரித்துள்ளது.
- இது தொடர்ச்சியான இணைய சிக்கல்களைத் தீர்ப்பதையும் இணைய குற்றங்களைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### மாநிலங்களவை தேர்தல்

- இந்தியாவின் 15 மாநிலங்களில் உள்ள 56 இடங்களுக்கான மாநிலங்களவை தேர்தலுக்கான தேதியை தேர்தல் ஆணையம் வெளியிட்டது.
- தற்போதைய மாநிலங்களவைவில், மொத்தம் 238 **தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்** உள்ளனர்.
- மாநிலங்களவை என்பது பாராளுமன்றத்தின் **நிரந்தர அவையாகும்**, இதில் உறுப்பினர்கள் **6 ஆண்டுபதவிக்காலத்திற்கு** நியமிக்கப்படுகிறார்கள்.
- உறுப்பினர்களில் **மூன்றில் ஒரு பங்கு ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஓய்வு** பெறுகிறார்கள். இது மாநிலங்களவை நடவடிக்கைகளின் தொடர்ச்சியை உறுதி செய்கிறது.

### உச்சநீதிமன்றத்தின் வைர விழா

- உச்சநீதிமன்றத்தின் வைர விழா கொண்டாட்டத்தின் போது **குடிமக்களை மையப்படுத்திய தகவல் மற்றும் தொழில்நுட்ப முயற்சிகளை** பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- அவையாவன
- **டிஜிட்டல் உச்சநீதிமன்ற அறிக்கைகள்** (Digi SCR): இது உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை நாட்டின் குடிமக்களுக்கு இலவசமாகவும் மின்னணு வடிவத்திலும் கிடைக்க உதவும்.
- **டிஜிட்டல் நீதிமன்றங்கள் 2.0** : மின்னணு வடிவத்தில் நீதிமன்ற பதிவுகளை மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்குக் கிடைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்ட மின்–நீதிமன்றங்கள் திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.
- உச்ச நீதிமன்றத்தின் புதிய **இணையதளம் ஆங்கிலம் மற்றும் ஹிந்தி** ஆகிய இரு மொழிகளில் தகவல்களை வழங்கும்.

வெற்றி I.A.S. கல்வி மையம் Since 2011

## 2.4 மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசு திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### MGNREGS திட்டத்தில் ஆதார் அடிப்படையிலான கட்டண முறை (ABPS) கட்டாயம்

- ஜனவரி 1, 2024 முதல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் (MGNREGS) தொழிலாளர்களுக்கு **ஆதார் அடிப்படையிலான கட்டண முறை** (ABPS) மூலம் மட்டுமே ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- இந்த முறையை அமல்படுத்துவதற்கான முதல் உத்தரவு ஜனவரி 30, 2023 அன்று வெளியிடப்பட்டது, அதைத் தொடர்ந்து பிப்ரவரி 1, மார்ச் 31, ஜூன் 30, ஆகஸ்ட் 31 மற்றும் டிசம்பர் 31 வரை நீட்டிக்கப்பட்டது

### பிரேரணா திட்டம்

- மத்திய அரசின் **கல்வி அமைச்சகத்தின்** பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையானது பிரேரணா என்ற செயல்முறை கற்றல் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- பாரம்பரியமும் புதுமைகளும் சந்திக்கும் சிறந்த தொழில்நுட்பத்தைக் கொண்ட மாணவர்களுக்கு இது ஓர் அனுபவ மற்றும் ஊக்கமளிக்கும் கற்றல் திட்டமாகும்.
- **ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை** தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான ஒரு வார கால உண்டு, உறைவிடக் கல்வித்திட்டமாகும்.

## PLI–ஆட்டோமொபைல் துறைக்கான திட்டம்

- வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்களுக்கான உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (PLI) திட்டத்தின் **பதவிக்காலத்தை ஓராண்டுக்கு நீட்டிப்பதாக** கனரக தொழில்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இந்தத் திட்டம் பூஜ்ஜிய உமிழ்வு வாகனங்கள் (ZEVகள்), பேட்டரி மின்சார வாகனங்கள் மற்றும் ஹைட்ரஜன் எரிபொருள் வாகனங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- இத்திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகை 2022–23 நிதியாண்டு முதல் நிதியாண்டு வரை (5 வருட காலம்) பொருந்தும்.
- PLI திட்டம் மார்ச் 2020 இல் தொடங்கப்பட்டது.

## பிருத்வி விக்யான் திட்டம்

- மத்திய அரசாங்கம் சமீபத்தில் **பிருத்வி விக்யான் (PRITHVI)** திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இத்திட்டம் தற்போது நடைமுறையில் உள்ள ஐந்து துணைத் திட்டங்களை உள்ளடக்கியுள்ளது.
- "வளிமண்டலம் மற்றும் காலநிலை ஆராய்ச்சி கண்காணிப்பு அமைப்புகள் மற்றும் சேவைகளுக்கான முறைகள்" (ACROSS)
- "பெருங்கடல் சேவைகள், மாதிரி செயல்முறை , வளங்கள் மற்றும் தொழில்நுட்பம்"(O–SMART)
- "துருவ அறிவியல் மற்றும் கிரையோஸ்பியர் ஆராய்ச்சி" (PACER)
- "பூகம்பவியல் மற்றும் புவி அறிவியல்"(SAGE)
- "ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் மக்கள் தொடர்பு" (REACHOUT).
- **குறிக்கோள்** – வானிலை, கடல் மற்றும் காலநிலை ஆபத்துகள் மற்றும் காலநிலை மாற்றத்தின் அறிவியலைப் புரிந்துகொள்வதற்கும் முன்னறிவிப்பதற்கும் மாதிரி அமைப்புகளை உருவாக்குதல்.

## 'ஸ்மார்ட் 2.0' தொடக்கம்

- **ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சிலானது (CCRAS) இந்திய மருத்துவ முறைக்கான தேசிய ஆணையத்துடன் (NCISM)** இணைந்து சமீபத்தில் **'ஸ்மார்ட் 2.0'** (கற்பித்தல் வல்லுநர்களிடையே ஆயுர்வேத ஆராய்ச்சியை முதன்மைப்படுத்துவதற்கான நோக்கம்) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- **குறிக்கோள்** – ஆயுர்வேதத்தின் முன்னுரிமைப் பகுதிகளில் வலுவான மருத்துவ ஆய்வுகளை மேம்படுத்துதல்.

## யுவநிதி திட்டம்

- கர்நாடக முதல்வர் சித்தராமையா **"யுவ நிதி"** திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டம் பட்டதாரிகள் மற்றும் டிப்ளமோ படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு நிதியுதவி வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தின் மூலம் 2022–23 இல் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளுக்கு ₹3,000 மற்றும் டிப்ளமோ பெற்றவர்களுக்கு ₹1,500 பண உதவி வழங்கப்படுகிறது.

## PM ஜன்மன் திட்டம்

- **பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா–கிராமின் (PMAYG) திட்டத்தின் கீழ் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினர் குழுக்களைச் சேர்ந்த (PVTG)** ஒரு லட்சம் பயனாளி குடும்பங்களுக்கு ₹540 கோடி நிதியுதவியின் முதல் தவணையை பிரதமர் நரேந்திர மோடி வழங்கினார்.
- சமீபத்தில் தொடங்கப்பட்ட **PM – ஜன்மன் திட்டத்தின் (பிரதான் மந்திரி ஜன்ஜாதி ஆதிவாசி நியாய மகா அபியான் திட்டம்)** ஒரு பகுதியாக இந்த தவணை வழங்கப்படுகிறது.

## MPLADS e-SAKSHI செயலி அறிமுகம்

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அமைச்சகம் (MoSPI) சமீபத்தில் MPLADS e-SAKSHI செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தை (MPLADS) செயல்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை, அணுகல் தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதை இந்த செயலி நோக்கமாகக் கொண்டுள்ளது.

## அம்ரித் தரோஹர் முன்முயற்சி

- மத்திய அரசு அம்ரித் தரோஹர் முன்முயற்சியின் கீழ் சமீபத்தில் முன்னோடி திட்டத்தை தொடங்கியுள்ளது.
- இந்தியா முழுவதும் உள்ள ராம்சார் தளங்களின் தனித்துவமான பாதுகாப்பு மதிப்புகளை மேம்படுத்துவதற்காக இந்த முன்முயற்சி ஜூன் 2023 இல் தொடங்கப்பட்டது.
- இம்முயற்சியின் கீழ் 16 ராம்சர் இடங்கள் கண்டறியப்பட்டு அவற்றில் ஐந்து முன்னோடித் திட்டமாக எடுக்கப்பட்டுள்ளன.
- அந்த ஐந்து சதுப்பு நிலங்கள்
  - சுல்தான்பூர் தேசிய பூங்கா (ஹரியானா)
  - பிதர்கனிகா சதுப்புநிலங்கள் (ஒடிசா)
  - சிலிகா ஏரி (ஒடிசா)
  - சிர்பூர் (மத்திய பிரதேசம்)
  - யஷ்வந்த் சாகர் (மத்திய பிரதேசம்)
- இந்த முயற்சியை மத்திய சுற்றுலா அமைச்சகம் மற்றும் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் **அம்ரித் தரோஹர் திறன் மேம்பாட்டுத் திட்டம், 2023** இன் கீழ் தொடங்கியுள்ளது.

## அரசு பள்ளிகளில் தேர்ச்சி அறிக்கை அட்டைகள்

- தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கும் சுமார் 2.5 லட்சம் மாணவர்களின் தேர்ச்சி அறிக்கை அட்டைகளை அச்சிடுவதற்கு மத்திய அரசு ₹102 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.
- இந்த முயற்சி **சர்வ சிக்ஷா அபியானின்** (SSA) ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படுகிறது.
- SSA திட்டமானது மாணவர்களின் கல்வி மற்றும் கல்வி சாராத செயல்திறன் பற்றிய விரிவான நுண்ணறிவுகளை பெற்றோருக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சூரிய மேற்கூரை திட்டம்

- சமீபத்தில் பிரதமர் நரேந்திர மோடி '**பிரதான் மந்திரி சூர்யோதயா யோஜனா**' என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளார்.
- இது மத்திய அரசின் திட்டமாகும், இதன் கீழ் **ஒரு கோடி வீடுகளில்** சூரிய மின் தகடுகளை பொறுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய திட்டம் 40 **ஜிகாவாட்** சூரிய திறனை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## போயிங் சுகன்யா திட்டம்

- சமீபத்தில் **போயிங் சுகன்யா** திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- நாட்டின் வளர்ந்து வரும் **விமானப் போக்குவரத்துத் துறையில் பெண்களின் வருகையை ஆதரிப்பதை** இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டம் பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு பள்ளிகளில் ஸ்டெம் (STEM) எனப்படும் அறிவியல், தொழில்நுட்ப, பொறியியல் மற்றும் கணித துறைகளில் முக்கியமான திறன்களைக் கற்றுக்கொள்வதற்கும், விமானப் போக்குவரத்துத் துறையில் பயிற்சி அளிப்பதற்கும் வாய்ப்புகளை வழங்கும்.

## நிலக்கரி வாயுமயமாக்கல்

- நிலக்கரி/பழுப்பு நிலக்கரி வாயுமயமாக்கல் திட்டங்களை மேம்படுத்துவதற்காக ₹8,500 கோடியை நிதி உதவியாக ஒதுக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நிலக்கரி வாயுமயமாக்கல் திட்டங்களுக்கான ஊக்கத்தொகை மூன்று பிரிவுகளின் கீழ் வழங்கப்படும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சூழலியல்

### கோவையில் வனவிலங்குகளுக்கான மறுவாழ்வு மையம் (RTRC)

- கோவை மாவட்டம் சிறுமுகை அருகே பெத்திகுட்டையில் **வனவிலங்குகளுக்கான மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம்** (RTRC) அமைப்பதற்கு ₹19.5 கோடியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.
- கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் RTRCகள் நிறுவப்படும் என்று தமிழக அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது.
- RTRC என்பது காயமடைந்த மற்றும் ஆதரவற்ற விலங்குகளுக்கான சிறப்பு சிகிச்சை மற்றும் பராமரிக்கும் மையமாகும்.

### மனித – விலங்கு மோதல்

- மனித – விலங்கு மோதலால் நிரந்தரமாக உடல் ஊனமுற்றோர் மற்றும் உயிரிழப்பவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும். இழப்பீட்டுத் தொகை ₹5 லட்சத்தில் இருந்து ₹10 லட்சமாக தமிழக அரசு உயர்த்தியுள்ளது.

### கும்கி யானைகள்

- மனித விலங்கு மோதலை நிர்வகிப்பதற்கு கும்கி யானைகள் மற்றும் பாகன்களை அனுப்புமாறு **ஒடிசா அரசு** தமிழக அரசிடம் உதவி கேட்டுள்ளது.
- வனவிலங்கு பாதுகாப்பு நோக்கங்களுக்காகப் கும்கி யானைகளுக்கு பயிற்சியளிக்கும் மாதிரியை தமிழகம் வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.
- காட்டு யானைகளை நிர்வகிக்கவும் விரட்டவும் வியூக ரீதியாக கும்கி யானைகள் ஈடுபடுத்தப்படுகிறது.

### பனிச்சிறுத்தைகளின் நிலை குறித்த அறிக்கை

- இந்தியாவில் 2019 இல் தொடங்கிய பனிச் சிறுத்தைகளின் நிலை குறித்த அறிக்கையை (SPAI) சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இந்த மதிப்பீட்டின் படி, இந்தியாவில் 718 பனிச்சிறுத்தைகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- அதிக எண்ணிக்கையிலான பனிச்சிறுத்தைகள் லடாக்கில் (477) இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து உத்தரகாண்ட் (124), இமாச்சலப் பிரதேசம் (51) ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- தற்போதைய மதிப்பீட்டின்படி, இந்திய பனிச் சிறுத்தைகளின் எண்ணிக்கை உலகளவில் 10% முதல் 15% வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்



# 4. பொருளாதாரம்

## 4.1 தற்போதைய பொருளாதாரப் போக்குகள்

### இந்தியாவின் வளர்ச்சி பற்றிய NSO ஆய்வு

- தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) வெளியிட்ட தரவுகளின்படி 2023–24 இல் இந்தியாவின் உண்மையான GDP **வளர்ச்சி 7.3%** என மதிப்பிடப்பட்டுள்ளது, இது முந்தைய ஆண்டு 7.2% ஆக இருந்தது.
- பொருளாதாரத்தில் மொத்த மதிப்பு கூட்டல் (GVA) வளர்ச்சி 2022–23 இல் 7% இலிருந்து 6.9% ஆக சற்று குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பல பரிமாண வறுமை பற்றிய நிதி ஆயோக்கின் அறிக்கை

- நிதி ஆயோக் வெளியிட்ட ஒரு விவாதக் கட்டுரையின்படி, பல பரிமாண வறுமையில் **வாழும் இந்தியாவின் மக்கள்தொகையின் பங்கு 2013–14 இல் 29.17 சதவீதத்திலிருந்து 2022–23 இல் 11.28 சதவீதமாகக் குறைந்துள்ளதாக** மதிப்பிடப்பட்டுள்ளது.
- கடந்த ஒன்பது ஆண்டுகளில் மொத்தம் 24.82 கோடி மக்கள் பல பரிமாண வறுமையிலிருந்து விடுபட்டுள்ளதாக அந்த அறிக்கை கூறுகிறது.0

### ஆக்ஸ்பாம் அறிக்கை 2024

- 'Survival of the Richest: The India story' என்ற தலைப்பில் ஆக்ஸ்பாம் அறிக்கை சமீபத்தில் வெளியிட்டது.

**முக்கிய சிறப்பம்சங்கள்**

- வெறும் 5 சதவீத இந்தியர்கள் நாட்டின் செல்வத்தில் 60 சதவீதத்திற்கும் மேல் வைத்துள்ளனர்.
- 50 சதவீத மக்கள்தொகையினரிடம் 3 சதவீத செல்வம் மட்டுமே உள்ளது.
- உலகிலேயே அதிக ஏழைகள் அதாவது 228.9 மில்லியன் பேர் இந்தியாவில் உள்ளனர்.
- இந்தியாவில் மொத்த பில்லியனர்களின் எண்ணிக்கை 2020 இல் 102 ஆக இருந்து 2022 இல் 166 பில்லியனர்களாக அதிகரித்துள்ளது.

## 4.2 அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் அறிக்கை 2024

- உலக வங்கி அதன் முதன்மை அறிக்கையான 'உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள்' அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டது.

**முக்கிய சிறப்பம்சங்கள்**

- இந்த அறிக்கையானது உலகளாவிய GDP வளர்ச்சி 2023 இல் மதிப்பிடப்பட்ட 2.7% லிருந்து 2024 இல் 2.4% ஆக குறையும் என்று கணித்துள்ளது.
- பருவநிலை மாற்றத்தைச் சமாளிக்கவும், 2030க்குள் மற்ற முக்கிய உலகளாவிய வளர்ச்சி இலக்குகளை அடையவும் **வளரும் நாடுகள் ஆண்டுக்கு சுமார் $2.4 டிரில்லியன் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும்.**

வெற்றி I.A.S. கல்வி மையம்

## AISHE 2021–22

- உயர்கல்விக்கான அகில இந்திய ஆய்வின் (AISHE) அறிக்கை **மத்திய கல்வி அமைச்சகத்தால்** சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**முக்கிய சிறப்பம்சங்கள்**

- 2021–22ல் உயர்கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை கிட்டத்தட்ட **4.33 கோடியாக** அதிகரித்துள்ளது.
- 2021–22ல் ஒட்டுமொத்த பெண்களின் சேர்க்கை **2.07 கோடியாக** அதிகரித்துள்ளது.
- ஆராய்ச்சி படிப்பில் 2014–15ல் 0.48 லட்சமாக இருந்த பெண்களின் சேர்க்கை 2021–22ல் 0.99 லட்சமாக இருமடங்காக அதிகரித்துள்ளது.
- ஆண்களை விட அதிகமான பெண்கள் அறிவியல் பாடத்தை தேர்வு செய்துள்ளனர்.

## புத்தொழில் நிறுவனங்கள் தரவரிசை 2022

- புத்தொழில் நிறுவனங்கள் தரவரிசை 2022 இல் 'சிறந்த செயல்திறன்' பிரிவின் கீழ் தமிழ்நாடு, குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.
- ஏழு சீர்திருத்தப் பகுதிகளில் மூன்றில் தமிழ்நாடு அதிகபட்சமாக 100 சதவிகித மதிப்பெண்களைப் பெற்றது
    - நிறுவன ஆதரவு
    - நிதி ஆதரவு
    - செயல்படுத்துபவர்களின் திறனை உருவாக்குதல்
- நாட்டில் ஒரு வலுவான புத்தொழில் நிறுவன சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கான பார்வையை அடைய பிப்ரவரி 2018 முதல் புத்தொழில் நிறுவனங்கள் தரவரிசை வெளியிடப்படுகிறது .
- **கிரீன்விரோ குளோபல் நிறுவனம்** ஆனது, இந்த நிகழ்வில் **'நிலைத்தன்மை வாகையர்'** பிரிவின் கீழ் 2023 ஆம் ஆண்டு தேசிய புத்தொழில் நிறுவனங்கள் விருதினைப் பெற்றது.
- தமிழ்நாட்டின் மற்றொரு நிறுவனங்கள் நிறுவனமான **அட்சுயா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்,** 2023 ஆம் ஆண்டிற்கான தேசியப் புத்தொழில் நிறுவனங்கள் விருதுகளில் ஆண்டின் சிறந்த **ஜெனிசிஸ் (முன்னணி அறிவியல் மற்றும் தொழில் நுட்பம்) புத்தாக்க விருதை** வென்றது

## ASER அறிக்கை 2023

- **ஆண்டு கல்வி நிலை அறிக்கை** (ASER), **பிரதம் என்ற சிவில் சமூக அமைப்பால் "அடிப்படைகளுக்கு அப்பால்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.**
- இந்த ஆய்வு கிராமப்புற இந்தியாவில் 14 மற்றும் 18 வயதுடைய இளைஞர்களை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது.
- இந்த ஆய்வு கடைசியாக 2017 இல் மேற்கொள்ளப்பட்டது.
- 26 மாநிலங்களில் உள்ள 28 மாவட்டங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.
- தமிழகத்தில் பெரம்பலூர் மாவட்டம் கணக்கெடுப்புக்கு தேர்வு செய்யப்பட்டது.
- பெரம்பலூரில் 97.2% பதின்ம வயதினர் ஏதேனும் ஒரு முறையான கல்வி நிறுவனத்தில் சேர்ந்துள்ளதாக கணக்கெடுப்பில் கண்டறியப்பட்டுள்ளது.
- பெரம்பலூரில் கணக்கெடுக்கப்பட்டவர்களில் 21.4% பேர் இரண்டாம் வகுப்பு பாடத்தைக் கூட படிக்க முடியவில்லை, இது தேசிய சராசரியை விட 25% குறைவாக உள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 5. அறிவியல்



## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### முப்பது மீட்டர் தொலைநோக்கி (TMT) திட்டம்

- முப்பது மீட்டர் தொலைநோக்கி (TMT) திட்டத்தைப் பற்றி விவாதிக்க, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் அதிகாரப்பூர்வ பிரதிநிதிகள் குழு, அமெரிக்காவின் ஹவாய் தீவில் உள்ள செயலற்ற எரிமலையான மௌனா கியாவுக்குச் சென்றுள்ளது.
- இது **30 மீட்டர் விட்டம்** கொண்ட முதன்மை கண்ணாடி ஆப்டிகல் மற்றும் அகச்சிவப்பு தொலை நோக்கி ஆகும், இது விண்வெளி பற்றிய ஆழமான புரிதல்களை உருவாக்க உதவும்.
- இது **அமெரிக்கா, ஜப்பான், சீனா, கனடா மற்றும் இந்தியா** ஆகிய நாடுகளிலுள்ள நிறுவனங்களின் கூட்டு முயற்சியாகும்.
- இத்திட்டத்தில் இந்தியா பங்கேற்க 2014 இல் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

### இடர் மீட்பு முன்னெச்சரிக்கை கடத்தி (DAT)

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) இரண்டாம் தலைமுறை **இடர் மீட்பு முன்னெச்சரிக்கை கடத்தியை** (DAT) உருவாக்கியுள்ளது.
- DAT – SG ஆனது கடலில் உள்ள மீனவர்களுக்கு படகுகளில் இருந்து அவசர செய்திகளை அனுப்பும் மேம்பட்ட திறன்களை செயல்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- DAT இன் முதல் பதிப்பு 2010 இல் இருந்து செயல்படுகிறது.
- சமீபத்தில், **இந்தியன் இம்யூனாலஜிகல்ஸ் லிமிடெட் நிறுவனமானது (IIL) இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஹெபடைடிஸ் ஏ தடுப்பூசியான 'ஹவிஷூர்'** ஐ ஹைதராபாத்தில் அறிமுகப்படுத்தியது.
- IIL என்பது தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தின் (NDDB) துணை நிறுவனமாகும்.
- **இது இரண்டு தவணை** தடுப்பூசியாகும்.
- ஹெபடைடிஸ் ஏ என்பது ஹெபடைடிஸ் ஏ வைரஸால் (HAV) ஏற்படும் கல்லீரல் அழற்சி நோயாகும்.

### தொழுநோய் சிகிச்சைக்கான மூன்று மருந்து முறைகள்

- சமீபத்தில் தொழுநோய்க்கான புதிய மூன்று மருந்துகளைக் கொண்ட சிகிச்சை முறைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் **2027ஆம் ஆண்டுக்குள்** தேசிய அளவில் தொழுநோய் பரவுவதை கட்டுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- தொழுநோய் என்பது மைக்கோபாக்டீரியம் லெப்ரே பாக்டீரியாவினால் ஏற்படும் ஒரு நாள்பட்ட தொற்று நோயாகும்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

# 5.2 விண்வெளி

## XPoSat செயற்கைக்கோள்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தீவிர எக்ஸ்ரே மூலங்களின் துருவமுனைப்பை ஆய்வு செய்வதற்காக அதன் முதல் Xray Polarimeter **செயற்கைக்கோளை** (XPoSat) ஜனவரி 1, 2024 அன்று ஏவியது.
- குறைந்த புவி சுற்றுப்பாதையில் இருந்து கண்காணிப்பதற்காக XPoSat வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது இரண்டு அறிவியல் பேலோடுகளை சுமந்து செல்லும் திறன் உடையது.
- திட்டக்காலம் தோராயமாக **ஐந்து ஆண்டுகள்** இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- முதன்மை பேலோடை இஸ்ரோ மையங்களின் ஆதரவுடன் பெங்களூரு ராமன் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கியுள்ளது.
- இரண்டாம் நிலை பேலோடை **யு.ஆர். ராவ் செயற்கைக்கோள் மையம்** உருவாக்கியுள்ளது.

## ஸ்பேஸ்–எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் – 9 ராக்கெட்

- நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (NSIL) நிறுவனமானது 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ஸ்பேஸ்–எக்ஸ் நிறுவனத்தின் பால்கன்– 9 ராக்கெட்டில் GSAT20 (GSATN2 என மறுபெயரிடப்பட்டது) செயற்கைக்கோளை ஏவ உள்ளது.
- NSIL என்பது இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் வணிகப் பிரிவாகும்.
- GSAT20 ஆனது **NSILன்** முழு நிதியுதவியுடன் வடிவமைக்கப்பட்டு சொந்தமாக, இயக்கப்படும்.
- இந்த செயற்கைக்கோள் **பிராட்பேண்ட்** மற்றும் **தகவல் தொடர்பு வசதிக்கான தேவையை** பூர்த்தி செய்ய முதன்மையாக பயன்படுத்தப்படுகிறது.

## சந்திரயான் – 3

- இந்தியாவின் சந்திரயான் – 3 லேண்டரின் இருப்பிடத்தை நாசா விண்கலம் வெற்றிகரமாக அடையாளம் கண்டது.
- NASAவின் Lunar Reconnaissance Orbit-er (LRO) மற்றும் ISROவின் விக்ரம் லேண்டர் ஆகியவற்றுக்கு இடையே முதல் முறையாக சந்திர மேற்பரப்பில் ஒரு லேசர் கற்றை அனுப்பப்பட்டு பிரதிபலிக்கப்பட்டது.

## நிசார் திட்டம்

- பூமியின் சிக்கலான சுற்றுச்சூழல் அமைப்புகளில் இயற்கையான செயல்முறைகள் மற்றும் மாற்றங்களைக்கண்காணிக்க வடிவமைக்கப்பட்ட **நாசா இஸ்ரோ செயற்கைத் துளை ரேடார் (NIS-AR) திட்டம், "2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில்"** தொடங்கப்பட இருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- நிசார் என்பது **நாசா மற்றும் இஸ்ரோ** ஆகியவற்றால் கூட்டாக உருவாக்கப்பட்ட ஒரு **குறைந்த பூமி சுற்றுப்பாதை** (LEO) கொண்ட ஆய்வகம் ஆகும்.
- பூமியின் சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்துகொள்வதற்காக நிசார் இடஞ்சார்ந்த மற்றும் நேரம் பற்றிய நிலையான தரவை வழங்கும்.

## INSAT–3DS செயற்கைக்கோள்

- ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் உள்ள ஏவுதளத்திற்கு **இன்சாட்3டிஎஸ்** செயற்கைக்கோள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தெரிவித்துள்ளது.
- இந்த செயற்கைக்கோள் அடுத்த மாதம் **ஜிஎஸ்எல்வி எஃப்14** மூலம் விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- தற்போதுள்ள சுற்றுப்பாதையில் உள்ள **INSAT–3D மற்றும் 3DR** செயற்கைக்கோள்களுக்கு தொடர்ந்து சேவைகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது

## SLIM திட்டம்

- நிலவை ஆய்வு செய்வதற்கான ஜப்பானின் **ஆளில்லாத திறன்மிக்க கலம்** (SLIM) வெற்றிகரமாக நிலவில் தரையிறங்க இஸ்ரோவின் சந்திரயான்–2 விண்கலம் உதவியது.
- இது மூன் ஸ்னைப்பர் என்றும் அழைக்கப்படுகிறது.
- இதன்மூலம் அமெரிக்கா, சோவியத் யூனியன், சீனா மற்றும் இந்தியாவுக்குப் பிறகு மென்மையான சந்திரனில் தரையிறங்கும் **ஐந்தாவது நாடாக ஜப்பான் மாறியது**..

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## 4ஜி சேவைகள்

- உள்துறை அமைச்சகமானது அதன் ஆண்டு இறுதி மதிப்பாய்வில், 1,545.66 கோடி செலவில் சீனாவுடனான எல்லை உட்பட இந்தியாவின் சர்வதேச எல்லைகளில் 1,100 க்கும் மேற்பட்ட எல்லைப் புறக்காவல் நிலையங்களுக்கு 4G மொபைல் சேவைகளை மத்திய அரசு அங்கீகரித்துள்ளதாகக் கூறியுள்ளது.
- இந்த திட்டத்தை செயல்படுத்த **தொலைத்தொடர்பு துறை மற்றும் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட்** ஆகியவற்றுடன் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக **உள்துறை அமைச்சகம்** தெரிவித்துள்ளது.

## இந்தியாவின் பெட்ரோலிய தலைநகரம்

- **"இந்தியாவின் பெட்ரோலிய தலைநகரமாக"** குஜராத் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- குஜராத்தில் இரண்டு பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் உள்ளன, அவை ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரி லிமிடெட்டின் ஜாம்நகர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பருச் மாவட்டத்தில் உள்ள தஹேஜில் அமைந்துள்ள ONGC Petro Ad-ditions Limited (OPAL) இன் அதிநவீன பெட்ரோ கெமிக்கல் வளாகம் ஆகும்.
- ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரி லிமிடெட்டின் ஜாம்நகர் சுத்திகரிப்பு நிலையம் உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் சிக்கலான சுத்திகரிப்பு நிலையமாகும்.

## KLI–SOFC திட்டம்

- பிரதமர் நரேந்திர மோடி, லட்சத்தீவு, கவரட்டியில் **கொச்சி – லட்சத் தீவுகள் இடையேயான நீர்மூழ்கி கண்ணாடி இழை இணைப்பு** (KLI–SOFC) திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- நீர்மூழ்கி கண்ணாடி இழை இணைப்பு மூலம் லட்சத்தீவு இணைக்கப்படும்.
- KLI–SOFC திட்டம் இணைய வேகத்தை அதிகரிக்க வழிவகுக்கும்.
- "வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் லட்சத்தீவுகள் வலுவான பங்கு வகிக்கும்"

## இந்தியாவின் மிக நீளமான கடல் பாலம்

- மகாராஷ்டிராவின் மும்பையில் **அடல் பிஹாரி வாஜ்பாய் செவ்ரி-–நவ ஷேவா அடல் சேது பாலத்தை** பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.
- இது இந்தியாவின் மிக நீளமான பாலம் மற்றும் மிக நீளமான கடல் பாலம் ஆகும்.
- இந்த பாலம் சுமார் 21.8 கிமீ நீளம் கொண்ட ஆறுவழிப் பாலமானது, கடலின் மீது சுமார் 16.5 கிமீ நீளமும், நிலத்தில் சுமார் 5.5 கிமீ நீளமும் கொண்டது.

## EPFO இன் ஆளும் குழு மறுசீரமைப்பு

- இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (INTUC), அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC) மற்றும் அகில இந்திய ஐக்கிய வர்த்தகம் (AI-TUC) ஆகியவற்றின் பிரதிநிதிகளைத் தவிர்த்து, **தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் (EPFO) மத்திய அறங்காவலர் குழுவை (CBT) மத்திய அரசு மறுசீரமைத்துள்ளது.**
- INTUC, AITUC மற்றும் AIUTUC ஆகியவற்றிற்குப் பதிலாக, தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையம், சுயதொழில் பெண்கள் சங்கம் மற்றும் இந்திய தொழிற்சங்கங்களின் தேசிய முன்னணி ஆகியவற்றை EPFO புதிதாக குழுவில் சேர்த்துள்ளது

வெற்றி I.A.S. கல்வி மையம்

## பிரதமர் மோடி மூன்று புதிய திட்டங்களை தொடங்கி வைத்தார்

- **கேரள மாநிலம் கொச்சியில்** ரூ.4,000 கோடி மதிப்பிலான 3 முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களைப் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்தார்.
- கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் (சி.எஸ்.எல்) புதிய உலர் துறைமுகம் (என்.டி.டி)
- கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் சர்வதேசக் கப்பல் பழுதுபார்க்கும் வசதி (ஐ.எஸ்.ஆர்.எ.ஃப்)
- கொச்சி புதுவைபீனில் உள்ள இந்தியன் எண்ணெய்க் கழகத்தின் எல்பிஜி இறக்குமதி முனையம்
- இந்த முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்கள் இந்தியாவின் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழித்துறையில்மாற்றத்தைஏற்படுத்துவதற்கும், தன்னிறைவை உருவாக்குவதற்கும் பங்கு வகிக்கும்.

## உலகின் மிக உயரமான அம்பேத்கர் சிலை

- ஆந்திரப் பிரதேச அரசு விஜயவாடாவில் உள்ள ஸ்வராஜ் மைதானத்தில் **உலகின் மிக உயரமான அம்பேத்கர் சிலையை** திறக்க உள்ளது.
- இந்த சிலை "சமூக நீதியின் சிலை" என்று அழைக்கப்படுகிறது.
- இதன் உயரம் 206 அடி (சிலை – 125 அடி மற்றும் பீடம் – 81 அடி)

## இந்தியாவின் முதல் இரவு வான் பூங்கா

- மகாராஷ்டிராவில் உள்ள பென்ச் புலிகள் **சரணாலயம் (PTR) இந்தியாவின் முதல் மற்றும் ஆசியாவின் ஐந்தாவது இரவு வான் பூங்காவாக உருவாகியுள்ளது.**
- ஒரு இரவு – வான் சரணாலயம் என்பது பொதுவாக ஒரு பூங்கா அல்லது கண்காணிப்பகத்தைச் சுற்றியுள்ள பகுதியாகும், இது செயற்கை ஒளி மாசுபாட்டைக் கட்டுப்படுத்துகிறது மற்றும் வானியலை ஊக்குவிக்கிறது.
- இந்தியாவின் முதல் இரவு – வான் சரணாலயம் லடாக்கின் ஹான்லேயில் அமைந்துள்ள இந்திய வானியல் ஆய்வு மையம் (IAO) ஆகும்.

## வடகிழக்கு கவுன்சில் கூட்டம்

- சமீபத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா **ஷில்லாங்கில்** நடைபெற்ற வடகிழக்கு கவுன்சிலின் 71வது அமர்வில் உரையாற்றினார்.
- இது வடகிழக்கு பிராந்தியத்தின் (NER) பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான நோடல் ஏஜென்சியாகும்.
- இது **வடகிழக்கு பிராந்தியச்சட்டம், 1971** மூலம் பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.

## வடகிழக்கு பிராந்தியத்தில் முதல் இயற்கை மருத்துவமனை

- **அஸ்ஸாமில் உள்ள தீப்ரூகரில்** மத்திய ஆயுஷ் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் மற்றும் அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா ஆகியோர் மத்திய யோகா மற்றும் இயற்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு (CRIYN) அடிக்கல் நாட்டினர்.
- இது வடகிழக்குபிராந்தியத்தில்அமையயுள்ள முதல் யோகா மற்றும் இயற்கை மருத்துவமனையாகும்.
- இது இந்தியாவில் இருதய நோய்களுக்கான யோகா மற்றும் இயற்கை மருத்துவத்தில் சிறந்த மையமாக உருவாக்கப்படும்.

## தேர்வு குறித்த 7–வது உரையாடல்

- சமீபத்தில், **தேர்வு குறித்த 7–வது உரையாடல் (பரீக்ஷா பே சர்ச்சா) புதுதில்லியில்** நடைபெற்றது.
- ஒவ்வொரு குழந்தையின் தனித்துவம் ஊக்குவிக்கப்படும் சூழலை வளர்ப்பதற்கு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தை ஒன்றிணைப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011

# 7 சர்வதேச நிகழ்வு



## வங்கதேசத்தின் புதிய பிரதமர்

- வங்காளதேசத்தின் பிரதமராக ஷேக் ஹசீனா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் ஐந்தாவது முறையாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- இவர் உலகின் மிக நீண்ட காலம் பதவியில் இருந்த பெண் தலைவராவார்.

## 19வது அணிசேரா உச்சி மாநாடு

- அணிசேரா இயக்கத்தின் 19வது உச்சி மாநாடு உகாண்டாவில் உள்ள கம்பாலாவில் நடைபெற்றது.
- உச்சிமாநாட்டின் கருப்பொருள் "Deepening Cooperation for Shared Global Affluence" என்பதாகும்.
- கம்பாலா பிரகடனம் இந்த உச்சிமாநாட்டில் வெளியிடப்பட்டது.

## டென்மார்க்கின் புதிய மன்னர்

- டென்மார்க்கின் புதிய மன்னராக தனது தாயார் ராணி மார்கிரேத் IIக்குப் பிறகு மன்னர் பத்தாவது பெடரிக் அரியணை ஏறினார்.
- மார்கிரேத் II கடந்த 52 ஆண்டுகளாக ராணியாக இருந்தார்.

VETRI I.A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்

# 8 தமிழ்நாடு



## தமிழக அரசு 37,000 கோடி கடன் வாங்க திட்டம்

- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வெளியிட்ட சந்தைக் கடன்களின் குறிகாட்டி அறிக்கையின்படி, 2023-24 நிதியாண்டின் நான்காவது காலாண்டில் தமிழக அரசு 37,000 கோடி கடன் வாங்க திட்டமிட்டுள்ளது.
- சமீபத்திய ஆண்டுகளில் தமிழக அரசு கடன் வாங்குவதில் **முதலிடத்தில்** உள்ளது.
- தமிழ்நாட்டின் நிலுவையில் உள்ள பொறுப்புகளில் மாநில வளர்ச்சிக் கடன்கள் (SDLs) ஒரு முக்கிய அங்கமாகும்

## TNEB பாதுகாப்புச் செயலி

- **தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்** (Tangedco) மின் தடைகளை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ள நூற்றுக்கணக்கான பராமரிப்பு ஊழியர்களின் பாதுகாப்பை மேம்படுத்த மொபைல் செயலியை உருவாக்கியுள்ளது.
- **குறிக்கோள்** – பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்தல்.

## வேர்களைத் தேடி திட்டம்

- இத்திட்டத்தின் கீழ், கனடா, பிஜி, இலங்கை மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து 58 புலம்பெயர் தமிழ் இளைஞர்கள் குழு தெரிவு செய்யப்பட்டது.
- **வேர்களைத் தேடி திட்டம்** என்பது 2 வார கலாச்சார சுற்றுலா நிகழ்ச்சியாகும், கடந்த காலத்துடன் நிகழ்காலத்தை மீண்டும் இணைக்கவும், தலைமுறைகளுக்கு இடையே தொப்புள்கொடி உறவை ஏற்படுத்தவும் உதவும் வகையில், தமிழ் புலம்பெயர் இளைஞர்களுக்காக தமிழக அரசு இத்திட்டத்தை தொடங்கியுள்ளது

## தமிழ்நாடு தென்னை நார் கொள்கை 2024

- சமீபத்தில் **தமிழ்நாடு தென்னை நார் கொள்கை 2024**-ஐ முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.
- **2030-க்குள் இந்தத் துறையில் ₹3,000 கோடி** மதிப்பிலான முதலீடுகளை ஈர்த்து, **60,000 வேலை வாய்ப்புகளை** உருவாக்குவதை இந்தக் கொள்கை இலக்காகக் கொண்டுள்ளது.
- **கொள்கையின் சிறப்பம்சங்கள்**
  - புதிய, புதுமையான தென்னை நார் தயாரிப்புகளுக்கு பிரத்தியேகமாக சிறப்பு மையங்களை அமைத்தல்
  - தென்னை நார் பூங்கா மற்றும் தென்னை நார் பரிசோதனை ஆய்வகத்தை நிறுவுதல்
  - விளிம்புநிலை பிரிவைச் சேர்ந்த தொழில் முனைவோரை ஊக்குவித்தல்
  - பசுமை முயற்சிகளை ஊக்குவித்தல் மற்றும் எளிதாக்குதல்
  - தென்னை நார் MSMEகளின் அளவை அதிகரிப்பதற்கும் பல்வகைப்படுத்துவதற்கும் உந்துதலை வழங்குதல்.

## "தோழி" விடுதிகள்

- தாம்பரம் சானடோரியத்தில் பணிபுரியும் பெண்களுக்காக மாநில அரசு நடத்தும் **'தோழி'** விடுதியை முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- தமிழ்நாடு முழுவதும் உயர்தர மலிவு விலையில் தங்கும் விடுதிகளை உருவாக்க **தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனமானது (TNWWHCL) சமூக நலம் மற்றும் பெண்கள் அதிகாரமளிக்கும் துறையின் கீழ் உருவாக்கப்பட்டது.**

வெற்றி I.A.S. கல்வி மையம்

## STEPS கணக்கெடுப்பு

- தொற்று அல்லாத நோய்களின் (NCD) ஆபத்து காரணிகளின் பரவலை மதிப்பிடுவதற்கான தமிழ்நாடு STEPS **கணக்கெடுப்பு – 2** மாநிலம் முழுவதும் தொடங்கப்பட்டுள்ளது.
- NCD ஆபத்து காரணி கண்காணிப்புக்கான (STEPS) அணுகுமுறை என்பது, NCD ஆபத்து காரணிகள் பற்றிய தரவைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரப்புவதற்கான எளிய, தரப்படுத்தப்பட்ட முறையாகும்.
- இக்கணக்கெடுப்பு உலக வங்கியால் நிதியளிக்கப்படுகிறது.

## ஆவணங்களைப் பாதுகாக்க பிளாக் செயின் தொழில்நுட்பம்

- பல்வேறு பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை சேதங்களிலிருந்து பாதுகாக்க பிளாக்செயின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்காக தமிழக அரசின் **பத்திரப்பதிவுத்துறையானது, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன்** (TNEGA) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- ஆவணங்களை பதிவு செய்யும் ஆவண உரிமையாளர்களுக்கு நம்பிக்கை இணையத்தின் முத்திரையுடன் கூடிய சான்றளிக்கப்பட்ட நகல்களை வழங்குவதையும் பதிவுத்துறையானது தொடங்க உள்ளது.

## நான்கு புதிய இடங்களில் அகழ்வாராய்ச்சி

- 2024 ஆம் ஆண்டில் நான்கு புதிய இடங்களில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக இந்திய தொல்லியல் துறையின் (ASI) அனுமதியை தமிழக அரசு கோரியுள்ளது.
- நான்கு தளங்கள்:
  - மருங்கூர், கடலூர்
  - கொங்கல்நகரம், திருப்பூர்
  - திருமலாபுரம், தென்காசி
  - சென்னானூர், கிருஷ்ணகிரி

## நீலகிரி வரையாடு எண்ணிக்கையை தீர்மானிக்க முன்னோடி ஆய்வு

- நீலகிரி வரையாட்டின் எண்ணிக்கையை மதிப்பிடுவதற்கான முறையைத் தீர்மானிக்க தமிழக அரசு ஒரு முன்னோடி ஆய்வை நடத்தியுள்ளது.
- நீலகிரி வரையாடு திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த ஆய்வு தொடங்கப்பட்டது.
- WWFIndia வின் 2015 அறிக்கையின்படி, தமிழ்நாடு மற்றும் கேரளாவில் 5,790 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 3,122 நீலகிரி வரையாடுகள் பரவியுள்ளது.
- **நீலகிரி வரையாடு திட்டம் அக்டோபர் 12, 2023 இல் தொடங்கப்பட்டது.**

## தரம் உயர்த்தப்பட்ட பிக்மி மென்பொருள் சேவை

- கர்ப்பிணிகள் மற்றும் பச்சிளங்குழந்தைகள் கூட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு (PICME) மென்பொருளானது சமீபத்தில் **பிக்மி 3.0 ஆக** மேம்படுத்தப்பட்டுள்ளது.
- புதிய பிக்மி 3.0 மென்பொருள் சேவையானது RCH (இனப்பெருக்கம் மற்றும் குழந்தை ஆரோக்கியம்) அடையாள அட்டையின் சுய–பதிவை ஊக்குவிக்கும், மேலும் சிறப்புப் பராமரிப்புப் பிரிவுகளில் (SNCU) இருந்து வெளியேற்றப்படும் புதிதாகப் பிறந்த குழந்தைகளைக் கண்காணிப்பதற்கான **ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள் (ICDS) திட்டத்திற்கு பிக்மி** மென்பொருள் மூலம் தரவுகள் பகிரப்படும்.
- ஒவ்வொரு ஆண்டும் மாநிலத்தில் உள்ள சுமார் **11 லட்சம் கர்ப்பிணிப் பெண்களின்** விவரங்களை இந்த மென்பொருள் பதிவு செய்கிறது.

## உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாடு 2024

- சென்னையில் 2024ஆம் ஆண்டுக்கான **உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டை** முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- **மாநாட்டின் கருப்பொருள்:** இந்த மாநாட்டின் கருப்பொருள்களாக தலைமைத்துவம், நீடித்த நிலைத் தன்மை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகிய மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன.

முக்கிய சிறப்பம்சங்கள்

- ஒருட்ரில்லியன்பொருளாதாரத்தைஎட்டுவதற்கான **லட்சிய ஆவணம்** வெளியிடப்பட்டது.
- வளர்ச்சியை விரைவுபடுத்த பொது மற்றும் தனியார் துறையின் முதலீடுகளை $3.8 டிரில்லியன் முதல் $4.3 டிரில்லியன் வரை ஈர்ப்பதற்காக ஒரு விரிவான 'வளர்ச்சி கட்டமைப்பு' வடிவமைக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் ₹31,000 கோடியை முதலீடு செய்ய **சிங்கப்பூர் அரசு** திட்டமிட்டுள்ளது.
- **தமிழ்நாடு குறைகடத்திகள் மற்றும் மேம்பட்ட மின்னனுக்கொள்கை 2024** வெளியிடப்பட்டது.
- கார்பன் நடுநிலையை அடைய இந்தியா மற்றும் டென்மார்க் இடையேயான **இந்திய பசுமை எரிபொருள் கூட்டமைப்பு** (GFAI) முன்முயற்சியானது தொடங்கப்பட்டது.
- காற்றாலை மின் ஆற்றல் உற்பத்தி திட்டங்களுக்கான **'தமிழ்நாடு மீளுருவாக்க மற்றும் செயல்பாட்டுக் கால நீட்டிப்புக் கொள்கை'** வெளியிடப்பட்டது.
- மொத்தம் ₹6,64,180 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டன.
- மொத்தம் 26,90,657 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

## தமிழ்நாடு குறைகடத்திகள் மற்றும் மேம்பட்ட மின்னனுக்கொள்கை 2024

- சமீபத்தில் நடந்த உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டில் தமிழ்நாடு குறைகடத்திகள் மற்றும் மேம்பட்ட மின்னனுக்கொள்கை 2024 வெளியிடப்பட்டது.

முக்கிய சிறப்பம்சங்கள்

- இந்தக் கொள்கையானது குறைகடத்திகள் மற்றும் மேம்பட்ட மின்னனுவியல் உற்பத்தியில் நிலையான முதலீடுகளை ஈர்க்க முயல்கிறது.
- **2030 ஆம் ஆண்டிற்குள் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான நபர்களைக் கொண்ட திறமையான மனித வளத்தை உருவாக்குவதை** நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இக்கொள்கையானது**தமிழ்நாடு தொழில்வழிகாட்டி நிறுவனத்தின்** மூலம் செயல்படுத்தப்படும்.
- இக்கொள்கையின் கீழ் ஊக்கத்தொகையானது **தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டு கழகத்தால்** (SIPCOT) வழங்கப்படும்.

## உலகத் தமிழர் பொருளாதார மாநாடு

- 10வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு **சென்னையில் நடைபெறுகிறது.**
- உலகத் தமிழர்கள் பொருளாதார மாநாட்டுடன் உலகப் பொருளாதார உச்சி மாநாடும் நடைபெறுகிறது.
- முதல் உலகத் தமிழர் பொருளாதார மாநாடு 2009 இல் சென்னையில் நடைபெற்றது.

## நலம் நாடி செயலி தொடக்கம்

- நலம் நாடி செயலியை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.
- இந்த செயலி **தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையால்** தொடங்கப்பட்டது.
- **கற்றல் குறைபாடுகள் உள்ள மாணவர்களைக் கண்காணிக்க சிறப்புக் கல்வியாளர்களுக்கு இந்தச்** செயலி உதவும்.

## அயலகத் தமிழர் தினம் – 2024

- **அயலகத் தமிழர் தினம் 2024** சென்னை வர்த்தக மையத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இவ்விழாவின் போது அயலகத் தமிழர்களின் சொந்த ஊர்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட **எனது கிராமம் திட்டம்** தொடங்கப்படும்.

## தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்'

- கடலோர வளங்களை மீட்டெடுத்து பாதுகாக்க **"நெய்தல் மீட்சி இயக்கம்'** தமிழக அரசு சார்பில் தொடங்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தின் 14 கடலோர மாவட்டங்களில், 1,076 கிலோமீட்டர் தூரத்தை மையமாகக் கொண்டு, அடுத்துவரும் 5 ஆண்டுகளில் **உலக வங்கியின்**

நிதி உதவியுடன் நெய்தல் மீட்சி இயக்கம் செயல்படுத்தப்படவுள்ளது.

முக்கிய கருப்பொருள்கள்

- கடற்கரையோர சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்,
- பாதுகாப்பு,
- பல்லுயிர் பெருக்கம் மற்றும்
- கடலோரப் பகுதிகளில் மாசுக் கட்டுப்பாடு

- சிறப்பு திட்ட வாகனமாக **தமிழ்நாடு நீலக் கார்பன் முகமை** நிறுவப்படும்

## தமிழ்நாட்டில் உடல் உறுப்பு தானம் அதிகரிப்பு

- தமிழ்நாடு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் கூற்றுப்படி, 2022 உடன் ஒப்பிடும்போது, **2023 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உடல் உறுப்பு தானம் 14% அதிகரித்துள்ளது.**
- உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வின் காரணமாக இறப்பிற்குப்பின் தானம் செய்பவர்களின் எண்ணிக்கை 2022 இல் 156 ஆக இருந்து 2023 இல் 178 ஆக உயர்ந்தது.
- **2022ல் அதிக உறுப்பு தானம் வழங்கியதற்காக சிறந்த மாநில விருதை தமிழக அரசு பெற்றது.**

## நெல் கொள்முதல் செய்ய தமிழக அரசு திட்டம்

- நெல் அறுவடை காலம் விரைவில் தொடங்க உள்ளதால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமானது (TNCSC) 20லட்சம் டன்களுக்கு மேல் பயிர்களை கொள்முதல் செய்ய திட்டமிட்டுள்ளது.
- 2022–23 ஆம் ஆண்டில், தமிழகத்தில் சுமார் 5.22 லட்சம் விவசாயிகளிடமிருந்து சுமார் 44.22 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

## தமிழக அரசு விருதுகள் (2023)

- தமிழ் மொழி மற்றும் சமூக நீதிக்கான பங்களிப்புக்கான விருதுகளை ஒன்பது நபர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.
- அய்யன் திருவள்ளுவர் விருது – **தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள்** (2024)
- பேரறிஞர் அண்ணா விருது – **பத்தமடை பரமசிவம்** (2023)
- பெருந்தலைவர் காமராஜர் விருது – **உ.பலராமன்** (2023)
- மகாகவி பாரதியார் விருது – **கவிஞர் பழனி பாரதி** (2023)
- பாவேந்தர் பாரதிதாசன் விருது – **மு. முத்தரசு** (2023)
- தமிழ் தென்றல் திரு.வி.க விருது – **எஸ்.ஜெயசீல ஸ்டீபன்** (2023)
- முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதம் விருது – **ஆர்.கருணாநிதி** (2023)
- தந்தை பெரியார் விருது – **சுப.வீரபாண்டியன்** (2023)
- அம்பேத்கர் விருது – **பி.சண்முகம்** (2023)

## ஆலிவ் ரிட்லி அடைகாக்கும் காலம் தொடக்கம்

- சென்னை மற்றும் செங்கல்பட்டு கடற்கரையோரங்களில் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகளின் அடைகாக்கும் காலம் தொடங்கியுள்ளது.
- வங்காள விரிகுடா கடற்கரை ஆலிவ் ரிட்லிகளின் முக்கிய அடைகாக்கும் தளங்களில் ஒன்றாகும்.
- **அரிபடாஸ்** எனப்படும் மிகப்பெரும் அடைகாக்கும் நிகழ்வானது ஒடிசா கடற்கரை, தமிழ்நாடு மற்றும் ஆந்திர பிரதேச கடற்கரைகளில் நிகழ்கிறது.
- ஆலிவ் ரிட்லி கடல் ஆமைகள் மொத்தம் 38,721 கண்டறியப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் சுமார் 100 முட்டைகளை இடுகின்றன, அவை குஞ்சு பொரிக்க 45 முதல் 60 நாட்கள் ஆகும்.

## கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்

- மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் புதிதாக கட்டப்பட்டுள்ள **கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கை** ஜனவரி 24ஆம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

- இந்த அரங்கம் வைத்தமலை அடிவாரத்தில் அமைந்துள்ளது.
- இது இரண்டு தளங்களில் 3,700 இருக்கைகள் கொண்ட பார்வையாளர் மாடங்களைக் கொண்டிருக்கும்.

## நான் முதல்வன் நிரல் திருவிழா

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNS–DC) மாநிலம் முழுவதும் உள்ள பொறியியல் மாணவர்களுக்காக இளைஞர்களிடையே புதுமைகளை ஊக்குவிக்கும் வகையில் **நான் முதல்வன் நிரல் திருவிழாவை** நடத்துகிறது.
- இந்த திருவிழா **அண்ணா பல்கலைக்கழகத்தின்** ஆதரவுடன் நடத்தப்படுகிறது.

## மக்களைத் தேடி மருத்துவம்

- மக்களைத் தேடி மருத்துவம் (MTM) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, தொற்று அல்லாத நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான (NCDs) மருந்து பொருட்களுக்கான செலவு கிட்டத்தட்ட **மூன்று மடங்காக** அதிகரித்துள்ளதாக தமிழ்நாடு சுகாதாரச் செயலாளர் கூறியுள்ளார்.
- "மக்களைத் தேடி மருத்துவம்" (TN Door-step Healthcare Scheme) **திட்டம் 2021 இல் கிருஷ்ணகிரியில் தொடங்கப்பட்டது.**
- தொற்று அல்லாத நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக நோயாளிகள் மருத்துவமனைகளுக்குச் செல்லும் தேவையை நீக்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## EPR போர்ட்டல்

- அனைத்து உற்பத்தியாளர்கள், உருவாக்குபவர்கள், புதுப்பித்தல் மற்றும் மின்னணு கழிவுகளை மறுசுழற்சி செய்பவர்கள் உள்ளிட்ட அனைவரும் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு (EPR) போர்ட்டலில் பதிவு செய்யுமாறு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (TNPCB) அறிவுறுத்தியுள்ளது.
- மின்னணு கழிவு (மேலாண்மை) விதிகள், 2022ன் கீழ் மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் இந்த போர்ட்டல் உருவாக்கப்பட்டது.

## தமிழ்நாடு இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு

- தமிழ்நாட்டின் ஒருங்கிணைந்த இறுதி வாக்காளர் பட்டியல் இந்திய தேர்தல் ஆணையத்தால் சமீபத்தில் வெளியிடப்பட்டது.

**முக்கிய சிறப்பம்சங்கள்**

- தமிழகத்தின் வாக்காளர் எண்ணிக்கை சுமார் ஏழு லட்சம் வாக்காளர்கள் அதிகரித்து தற்போது **6.18 கோடியாக** உள்ளது.
- இதில் 3.14 கோடி பெண்கள், 3.03 கோடி ஆண்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் 8,200 பேர் உள்ளனர்.
- அதிக வாக்காளர்களை கொண்ட தொகுதியான செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள **சோழிங்கநல்லூரில்** 6,60,419 வாக்காளர்கள் உள்ளனர்.
- குறைந்த வாக்காளர்களை கொண்ட தொகுதியான நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள **கீழ்வேளூரில்** 1,72,140 வாக்காளர்கள் உள்ளனர்.

## பெண்களுக்கான புதிய கொள்கை

- பெண்களுக்கான புதிய கொள்கைக்கு தமிழக அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- இக்கொள்கையானது பெண்களின் முழுமையான வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளது, மேலும் கல்வி, பொருளாதார சுதந்திரம் மற்றும் அதிகாரப் பகிர்வு மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் கவனம் செலுத்துகிறது.
- இக்கொள்கை அமலாக்கத்தைக் கண்காணிக்க, **தலைமைச் செயலாளர்கள்** தலைமையில் மாநில அளவிலான குழுவும், **மாவட்ட ஆட்சியர்கள்** தலைமையில் மாவட்ட அளவிலான குழுக்களும் அமைக்கப்படும்.

## "TN BEAT EXPO 2024"

- **ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கான கண்காட்சி தமிழகத்தில் முதல்முறையாக நடைபெற்றது.**

- பட்டியல், பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த தொழில்முனைவோருக்கான தென்னிந்தியாவின் மிகப்பெரிய வணிக கண்காட்சிகளில் இதுவும் ஒன்றாகும்.
- இந்நிகழ்ச்சி **தமிழ்நாடு அரசு** மற்றும் **தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி** மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தூத்துக்குடி இடுக்கண் களைவோம் போர்ட்டல்

- தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ நிதி திரட்டுவதற்காக '**தூத்துக்குடி இடுக்கண் களைவோம்**' (thoothukuditik.org) போர்ட்டலைத் தொடங்கியுள்ளது.
- பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரம், அவசர கால நிதி, ஆதரவு மற்றும் மருத்துவ உதவி வழங்குவதற்காக தூத்துக்குடி மழை நிவாரணம் மற்றும் மீட்பு நிதி என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

## இதயம் காப்போம் முன்முயற்சி

- தமிழ்நாட்டின் **இதயம் காப்போம் முன்முயற்சி** ஆறு மாதங்களை நிறைவு செய்துள்ளது. மேலும் இதன்மூலம் **5,000 பயனாளிகள்** பயனடைந்துள்ளனர்.
- இது ஜூன் 2023 இல் தொடங்கப்பட்ட ஒரு இதய ஆரோக்கிய திட்டமாகும்.
- ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இதயத்தைக் கொண்டு செல்லும் போது குறிப்பாக தொலைதூர/கடினமான பகுதிகளில் உயிர்களைக் காப்பாற்றுவதே இதன் நோக்கமாகும்.

## உங்களை தேடி, உங்கள் ஊரில் திட்டம் தொடக்கம்

- பொதுமக்களின் குறைகளை விரைந்து தீர்க்கும் வகையில், **"உங்களை தேடி, உங்கள் ஊரில்"** என்ற புதுமையான திட்டத்தை, தமிழக அரசு தொடங்கியுள்ளது.
- இத்திட்டம் பொதுமக்களின் குறைகளை விரைவாக நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இம்முயற்சியின் கீழ், மாவட்ட ஆட்சியர் மற்றும் மூத்த அரசு அதிகாரிகள் ஒரு தாலுகாவிற்குச் சென்று மாதத்தில் ஒரு நாள் (4வது புதன்கிழமை) தங்கி அந்த பகுதியில் உள்ள அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிவார்கள்

வெற்றி I.A.S. கல்வி மையம்
Since 2011
வெற்றி I.A.S. கல்வி மையம்